செய்திவெளியீடுஎண். 1075 நாள் ::4.12.2010

# செய்தி வெளியீடு

## தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் டிசம்பர் 8ம் தேதி முதல் 10ம் தேதி வரையில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் அமைச்சர்கள் முன்னிலையில் அனைத்து பயனாளிகளுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

*******

தமிழகத்தைக் குடிசையில்லாத மாநிலமாக மாற்றிடும் உன்னத நோக்கத்துடன் 21 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். பொதுமக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ் 2010–11 முதல் 2015–16 வரையிலான ஆறு ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றிட முடிவு செய்து, 2010–11 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கான்கிரீட் வீடுகள் பெறத் தகுதி வாய்ந்த எஞ்சிய குடிசை வாழ் மக்களுக்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் வரும் டிசம்பர் 7 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை அடையாள அட்டை வழங்க அரசு முடிவு செய்து அறிவித்திருந்தது. எனினும், 7.12.2010 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் சிறப்பு அமைச்சரவை கூட்டத்தைக் கருத்தில் கொண்டு, இந்த அடையாள அட்டை வழங்கும் பணி 8.12.2010 தொடங்கி 10.12.2010 வரை ஒரே கால கட்டத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

*******

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**